©
தமிழ்நாடு அரசு
2023

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 46] சென்னை, புதன்கிழமை, நவம்பர் 22, 2023
கார்த்திகை 6, சோபகிருது, திருவள்ளுவர் ஆண்டு–2054

# பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

*[அரசாணை (நிலை) எண். 150, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (M2)த் துறை, 15 செப்டம்பர் 2023.]*

1948–ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) மற்றும் 40B ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு 112 ஆம் பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு பதுகாப்பு அலுவலர்கள் (கடமைகள், தகுதிகள் மற்றும் பணி நிபந்தனைகள்) விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் மேற்கொள்கிறார். மேலும், இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 115 ஆம் பிரிவில் கோரியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது:–

**திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில்:–

(1) விதி 3–இன், துணை விதி (1)–இல்–

(i) பகுதி (b)–க்குப் பதிலாக பின்வரும் பகுதி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும் அதாவது:–

"இந்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் தொழிற்சாலை குறித்த ஆலோசனைக்கான சேவை மற்றும் தொழிலாளர் நிறுவனங்களின் (DGFASLI) தலைமை இயக்ககத்தின் கட்டுப்பாட்டிலுள்ள யாதொரு நிறுவனத்தால் நடத்தப்படும் தொழிலகப் பாதுகாப்பு தொடர்பான யாதொரு பட்டயம் அல்லது மத்திய அல்லது மாநில சட்டங்கள் அல்லது மாநில அரசின்/மத்திய அரசின் நேரடி ஆட்சிப்பகுதியின்/இந்திய அரசின் தொழில்நுட்பக் கல்வித்துறை அல்லது தொழில்நுட்பக் கல்வி வாரியத்தால் தோற்றுவிக்கப்பட்ட யாதொரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்படுகிற ஓராண்டு கால அளவிற்கு குறையாத முழு நேர பட்டம் அல்லது முழுநேரப் பட்டயம் பெற்றிருக்க வேண்டும்: மற்றும்".

(ii) துணை விதி (2) இல் இரண்டாம் வரம்பு நிபந்தனைக்குப் பின்னர், பின்வரும் வரம்பு நிபந்தனை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது, ‘‘மேலும் தொழிற்சாலையில் நியமனம் செய்யப்பட்ட பாதுகாப்பு அலுவலர், அத்தகைய நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்குள் அந்த தொழிற்சாலையில் பணியாற்றும் பெரும்பான்மையான பணியாளர்கள் பேசும் மொழியில் போதிய அறிவு பெற்றவராக இருப்பதை தொழிற்சாலை விவகாரங்களுக்குப் பொறுப்பு வகிப்பவர் உறுதி செய்ய வேண்டும்’’

(2) விதி (5)–இன்,–

(i) துணை விதி (1)–இல்

(அ) ‘‘ஏனையவை ஆங்கிலத்தில்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக ஏனையவை ஆங்கிலத்தில் மற்றும் முக்கியமான இணையவழி வேலைவாய்ப்பு வலைவாயில் ஒன்றில்’’ என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(ஆ) இரண்டாம் வரம்பு நிபந்தனையில், ‘‘மாற்றுப்பணி அடிப்படையில் தொழிலகங்களுக்கான ஆய்வாளரகத் துறை’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘மாற்றுப்பணி அடிப்படையில் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் மற்றும் மாற்றுப்பணி அடிப்படையில் நிரப்பப்படும்போது, (1)–ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டிய தேவையில்லை’’ என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(இ) இரண்டாம் வரம்பு நிபந்தனைக்குப் பின்னர், பின்வரும் வரம்பு நிபந்தனை சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் அதாவது,–

மேலும் ஒரே தொழிற்சாலை விவகாரங்களுக்குப் பொறுப்பு வகிப்பவர், மத்திய அல்லது மாநில அரசின் பொதுத்துறை நிறுவனம் அல்லது அரசு நிறுவனங்கள் அல்லது அரசு–சார் நிறுவனங்களுக்குச் சொந்தமான தொழிற்சாலை அல்லது தொழிற்சாலைகள் தொகுதியின் பணியாளர்களிலிருந்து பணியிட மாறுதல் அல்லது பதவி உயர்வு வாயிலாக பணியிடத்தை நிரப்பக் கருதும்போது காலிப்பணியிடம் குறித்து தகுந்த முறைகளைப் பயன்படுத்தி வாய்ப்புள்ள பணியாளர்களிடம் பரந்தளவில் விளம்பரம் செய்யப்பட வேண்டும்’’.

(ii) (2)ஆம் துணை விதிக்குப் பதிலாக, பின்வரும் துணை விதி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும் அதாவது:–

(2) நேரடி நியமனம் அல்லது பணியிட மாற்றம் அல்லது பதவி உயர்வு அல்லது நேமக அடிப்படையில் பாதுகாப்பு அலுவலர் பணியிடத்துக்கான நியமனமானது அப்பணியிடத்திற்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து தொழிற்சாலை விவகராங்களுக்குப் பொறுப்பு வகிப்பவரால் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவின் வாயிலாக மேற்கொள்ளப்பட வேண்டும்’’.

**குமார் ஜெயந்த்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர் (கூ.பொ),*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.